களுக்கெல்லாம் கூட பட்டா வாங்கும் நடவடிக்கையை சிலர் மேற்கொள்கிறார்கள். அப்படிப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக மத மோதல்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே அப்படிப்பட்ட நடவடிக்கைகளைத் தடை செய்வதற்கான நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆங்காங்கே ஏற்படுகிற சூழ்நிலையைப் பொறுத்தும் உரிமையைப் பொறுத்தும் அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கும்.

ஊரப்பட்டி கிராமத்தில் பால்வாடி கட்டிடம் அமைத்தல்.

120—(வினா எண் 3416) **திரு. த. மாரிமுத்து :** மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, ஊரப்பட்டி கிராமத்தில் பால்வாடி கட்டிடம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே (அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை விஸ்தரிப்பு அலுவலர் பதவிகள்.

*121—(*வினா எண் 7708)* **திரு. கோ. இரகுபதி :** மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியங்களில் காலியாக உள்ள கால்நடை விஸ்தரிப்பு அலுவலர்கள் பதவிகளில் கால்நடை ஆய்வாளர்களை நியமித்திட அரசு நடவடிக்கை எடுக்குமா ?